[23rd August 1960

MR. SPEAKER: There is absolutely no harm in extending the time. But I must also see that a large number of supplementaries are not put unless the questions are very important.

I would like the hon. Member Sri K. Vinayakam not to grumble. This is quite unparliamentary. If the hon. Member wants to say anything, let him stand and ask.

SRI K. VINAYAKAM: Sir, I did not grumble, I am very sorry.

Seed Farm at Bhavani

*305 Q.—SRI P. G. MANICKAM: *கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

(அ) கோயமுத்தூர் ஜில்லா பவானியில் கவர்ன்மெண்டா ரால் நடத்தப்படும் விதைப்பண்ணையானது எத்தனை வருடக் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது?

(ஆ) 1959-60-ல் இவ் விதைப்பண்ணைக்காக செலவழிக்கப் பட்ட தொகை எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The lands relating to State Seed Farm at Bhavani were taken on lease from 23rd September 1957 to 22nd September 1958. The lands were taken on requisition from 23rd September 1958 under Madras Requisitioning and Acquisition of Immovable Property Act, 1956.

(*b*) Rs. 84,606-08 nP.

SRI P. G. MANICKAM: *செப்டம்பர் மாதத்தோடு குத்தகை காலாவதி ஆவதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மீண்டும் குத்தகைக்கு இல்லாமல் கிரயத்திற்கு வாங்குவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *கிரயத்திற்கு வாங்கு வதாக உத்தேசம் இல்லை. மற்றவை குத்தகையிலேயே இருக்கும்.*

Minor Irrigation Schemes

*306 Q.—SRI P. G. MANICKAM: *கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

(அ) கோயமுத்தூர் ஜில்லா, கோபிச்செட்டிபாளையம் தாலுகா, தாளவாடி மலைப் பிரதேசத்தில் எத்தனை சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன?

(ஆ) இத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டால், எத்தனை ஏகரா நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்?

(இ) இத் திட்டங்கள் அமுலாக்கப்படுவதற்காக நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுவரின், விவரங்கள் யாவை?

23 rd August 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Nil.

(b) & (c) Do not arise.

SRI P. G. MANICKAM : அங்கே நிறைவேற்றுவதற்கு குறிப்பிட்ட சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் இருக்கின்றன. டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சர் டெவலப்மெண்ட் கமிட்டி மூலமாகப் பரிசிலனை செய்து சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் சர்க்காருக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்களா? அப்படி அனுப்பியிருந்தால் சர்க்கார் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சீப் என்ஜினியர், ஆப் இர்ரிகேஷன், கோயமுத்தூர், கோபிச்செட்டிபாளையம் தாலூக்காவில் மைனர் இர்ரிகேஷன், திட்டம் ஒன்றும் பரிசிலனையில் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

Flood control measures in Srivaikuntam

*** 318 Q.—SRI P. S. CHINNADURAI :** கனம் உள்ளிவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தாலூகாவில் வாழுவல்லானுக்கும் முக்காணிக்கும் இடையே சுமார் 300 ஏக்கர் நஞ்சை பயிர்கள் வருடா வருடம் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(ஆ) மூன்று வருஷங்களுக்கு முன் வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்காக, நெல்லை மாவட்ட நீர்ப்பாசன மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டு முக்காணிக்கருகில் வடிகால் ஒன்று கட்ட எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டதா?

(இ) அவ்வடிகால் கட்டும் திட்டம் இப்பொழுது எந்த நிலையிலிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir. But the damages are reported to be due to drainage difficulties caused by the neglect of ryots to maintain the drainage channel under Kudimaramath and not on account of floods.

(b) It was decided to prepare estimates, but when the site for construction of out-let had to be fixed, there was difference of opinion between the villagers of Mukkani and Umarimanagar and no final decision could be taken.

(c) In 1960, the question was again taken up by the Public Works Department but the sites suggested were found unsuitable for technical reasons. So it is proposed to deepen the existing drainage channel under the Special Minor Irrigation Programme and an estimate for the work is under preparation. This work is expected to prevent the damages referred to.

SRI P. S. CHINNADURAI : வாழுவல்லானுக்கும் முக்காணிக்கும் அருகில் அவுட்லெட் கட்டுவது எப்பொழுது பூர்த்தியாகும் என்று அறிய விரும்புகிறேன்.